பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
17 03 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள் –

- புதுதில்லி வந்துள்ள நியுசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லக்ஸன் இன்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து பேசுகிறார்.
- டிஜிட்டல் சுகாதார தொழில்நுட்பங்களில் உலக அளவில் இந்தியா முன்னிலை வகிப்பதாக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் தெரிவித்துள்ளார்.
- தமிழக நிதித்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 'தமிழர் நிதி நிர்வாகம் – தொன்மையும், தொடர்ச்சியும்' என்ற ஆவணநூலை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் வெளியிட்டார்.
- உக்ரைனுடனான போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ரஷ்ய அதிபருடன் நாளை பேச்சு நடத்த உள்ளதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் தெரிவித்துள்ளார்.
- சேலஞ்ச் கோப்பை ஸ்குவாஷ் போட்டி இன்று ஹாங்காங்கில் தொடங்குகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

புதுதில்லி வந்துள்ள நியுசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லக்ஸன் இன்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து பேசுகிறார்.

இன்று பிற்பகல் நடைபெறும் இந்த சந்திப்பின்போது இந்தியா – நியுசிலாந்து இடையேயான உறவை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து புதுதில்லியில் நடைபெறும் ராய்சினா பேச்சுக்களின் 10வது கூட்டத்தில் திரு கிறிஸ்டோபர் லக்ஸன் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

ஐந்து நாள் பயணமாக இந்தியா வந்துள்ள திரு லக்ஸன், மும்பையில் முன்னணி தொழிலதிபர்களையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

நியுசிலாந்து பிரதமருடன் அந்நாட்டு அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், தொழிலதிபர்கள், ஊடகவியலாளர்கள் அடங்கிய குழு ஒன்றும் வந்துள்ளது.

**[]<<<>>>[]**

டிஜிட்டல் சுகாதார தொழில்நுட்பங்களில் உலக அளவில் ந்தியா முன்னிலை வகிப்பதாக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் தெரிவித்துள்ளார்,

இந்திய – பசிபிக் மண்டலத்திற்கான நோய்த் தொற்று தயார் நிலை தொடர்பான குவாட் அமைப்பின் பயிலரங்கை புதுதில்லியில் அவர் இன்று தொடங்கி வைத்து பேசினார்.

நோய் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பை தீவிரப்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்,

சுகாதார மேம்பாடு தொடர்பான திட்டங்களில் நவீன தொழில்நுட்பத்தை இந்தியா அதிக அளவில் பயன்படுதிதி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நம் நாட்டில் டிஜிட்டல் நோய் தொற்று கண்காணிப்பு அமைப்பு மூலமாக பொது சுகாதார கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு வருவதாகவும், இது பிற நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாக திகழ்வதகாவும் திருமதி அனுப்பிரியா படேல் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அரசின் தலைமை அறிவியல் ஆலோசகர் பேராசியர் அஜய்குமார் ஸூட், நோய் தொற்று கண்காணிப்பு தொடர்பான தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்வதன் மூலமாக சர்வதேச அளவில் குறிப்பிட்ட நோய்களுக்கு விரைந்து தீர்வுகாண முடியும் என்று தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஐந்து -ஜி புதுமை கண்டுபிடிப்பு ஹாக்கத்தான் தொடர்பான அறிவிப்பை மத்திய தொலைத் தொடர்புத்துறை இன்று வெளியிட்டுள்ளது.

சமூக மற்றும் தொழில்துறை சார்ந்த சவால்களுக்கு ஐந்து-ஜி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தீர்வுகாணும் இப்போட்டி ஆறு மாத காலம் நடைபெறவுள்ள அமைச்சசகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் மாணவர்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் நிபுணர்கள் பங்கேற்கலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு மூலமாக செயல்படுத்தப்படும் நெட்வொர்க் பராமரிப்பு, ஐந்து-ஜி ஒளிபரப்பு, தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் உள்ளிட்ட பல பிரிவுகளில் இந்த ஹேக்கத்தான் நடத்தப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதில் வெற்றிபெறுபவர்களுக்கு முதல் பரிசாக ஐந்து லட்சம் ரூபாயும், இரண்டாவது பரிசாக மூன்று லட்சம் ரூபாயும், மூன்றாவது பரிசாக ஒன்றரை லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழக நிதித்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 'தமிழர் நிதி நிர்வாகம் - தொன்மையும், தொடர்ச்சியும்' என்ற ஆவணநூலை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் வெளியிட்டார்.

இது தொடர்பான சிறப்பு இணைய பக்கத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

இதில் பண்டைய வரி விதிப்பு முறை முதல் தற்போதை நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான ஆய்வுகள் இதில் இடம்பெற்றிருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதிக்கு உட்பட்ட வெண்குடி அருகே பாலாற்றின் குறுக்கே 78 கோடி ரூபாய் செலவில் தடுப்பணை கட்டப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இந்த தடுப்பணையின் மூலம் 12 கிராமங்களின் நீர் ஆதாரம் அதிகரிப்பதுடன் சுமார் இரண்டாயிரத்து 400 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்று கூறினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தமிழகத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் இந்த ஆண்டு 950 கோடி ரூபாய் செலவில் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அமைப்புசாரா தொழிலாளர்கள் ஓய்வுக்குப் பிறகு நிலையான வருமானம் பெற வழிவகை செய்யும் மத்திய அரசின் அடல் ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளனர்.

இத்திட்டம் எதிர்காலத்தில் தங்களுக்கு சிறப்பான பலனை தரும் என்று பயனானிளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - பயனாளிகள் ) ---32 செகண்ட்*

**[]<<<>>>[]**

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமில் புட்டினுடன் நாளை பேச்சு நடத்த உள்ளதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் தெரிவித்துள்ளார்.

புளோரிடாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நிலம் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று கூறினார்.

**[]<<<>>>[]**

யுக்ரைன் நாட்டின் புதிய ராணுவ தலைமை தளபதியாக மேஜர் ஜென்ரல் **Andrii Hnatov** நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இப்பதவியில் இருந்த **Anatoliy barhylevych** பணி இடமாற்றம் செய்யபபட்டதை அடுத்து மேஜர் ஜெனரல் **Andrii Hnatov** இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்,

**Anatoliy barhylevych** பாதுகாப்பு அமைச்சகத்தின் பொது ஆய்வாளராக சேவை ஆற்றுவார் என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆசியான் கேமிங் உச்சிமாநாடு பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இன்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளைக் சோந்த ஆயிரத்து 600-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

ஆசியான் உறுப்பு நாடுகளின் கேமிங் துறை தொடர்பான புதிய வாய்ப்புகள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

ஜம்மு காஷ்மீரின் குப்வாரா பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

அங்குள்ள **krumhoora** கிராமத்தில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து, பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல்துறையினர் அடங்கிய கூட்டுப்படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டதாகவும், அப்போது தீவிரவாதிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து பாதுகாப்புப் படையினர் திருப்பி தாக்குதல் நடத்தியதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த சண்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

[]<<<>>>[]

இந்தியாவில் சட்டவிரோதமாக குடியேறிய பங்ளாதேஷை சேர்ந்த ஏழு பேரை தில்லி காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இந்தியா – பங்ளாதேஷ் எல்லைப் பகுதியில் உள்ள நதி வழியாக இவர்கள் இந்தியாவுக்குள் ஊடுறுவியதாகவும், தில்லி என் சி ஆர் பகுதியில் பதுங்கி இருந்த இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தில்லி கிழக்கு மாவட்ட காவல்துறை ஆணையர் திரு அபிஷேக் தானியா தெரிவித்துள்ளார்.

இவர்களை அந்நாட்டுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தில்லி அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒன்பது மாதங்களுக்கும் மேலாக தங்கியிருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோர் ஆகியோர் நாளை மறுநாள் பூமிக்கு திரும்ப உள்ளதாக அமெரிக்காவின் நாசா தெரிவித்துள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ட்டிராகன் விண்கலம் மூலம் இவர்களை அழைத்துவர முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வானிலையைப் பொறுத்து இவர்கள் பூமி திரும்புவதில் மாற்றம் இருக்கலாம் என்றும் நாசா கூறியுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் ஐந்ததாம் தேதி ஸ்டார் லைனர் விண்கலத்தில் இவர்கள் விண்வெளி ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்வதற்காக சென்றனர்.

பத்து நாட்கள் ஆய்வுக்குப் பின் பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டிருந்த நிலையில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக அவர்கள் பூமிக்கு திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது.

**[]<<<>>>[]**

உலக கோப்பை கபடி போட்டி இங்கிலாந்தில் இன்று தொடங்குகிறது.

ஏழு நாட்கள் நடைபெறும் இப்போட்டியின் **B** பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, தனது முதலாவது ஆட்டத்தில் இன்று இத்தாலியை எதிர்கொள்கிறது.

**wolverhampton**-னில் இப்ப்போட்டி மாலை மணி 5-30-க்கு தொடங்குகிறது.

மகளிர் பிரிவில் இந்திய அணி - வேல்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

சேலஞ்ச் கோப்பை ஸ்குவாஷ் போட்டி இன்று ஹாங்காங்கில் தொடங்குகிறது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியாவின் **Ravi dixit** - பிலிப்பைன்ஸின் ஜோனாதன் ரைஸை எதிர்கொள்கிறார்.

இப்போட்டி பிற்பகல் மணி 2-45-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**